Department of Education,Sabaragamuwa Province/ Weekly School

**01 தொடக்கம் 15 வரையான வினாக்களுக்கு பொருத்தமற்ற கூற்றைத் தெரிவு செய்க**

01. அரசு என்பது
   1. சமூகத்தின் பொதுவிடயங்களில் கவனம் செலுத்துகிறது.
   2. முனிதனின் வெளிவாரி இயல்பைக் கட்டுப்படுத்துகிறது
   3. ஏனைய சங்கங்களின் இருப்பை உறுதி செய்கிறது.
   4. வெளிவாரியான கட்டுப்பாடுகளுக்கு உட்படாதது
   5. மனிதனின் உள்வாரி இயல்பைப் கட்டுப்படுத்துகிறது. (……)

2. இறைமை என்பது
   1. அது பிரிக்கமுடியாததாகும்
   2. அது கைமாறத்தகாததாகும்.
   3. அது சட்டத்தின் தோற்றுவாயாகும்
   4. அது பிரிக்கப்பட்டால் அழிந்துவிடும்.
   5.அது தேர்தல் காலத்தில் மட்டும் கைமாறுகிறது. (……)

3. தாராள ஜனநாயக அரசொன்றின் அடிப்படைப்பண்புகள்,
   1. அது நித்தியமாக நிலைத்திருப்பதாகும்.
   2. அது பொதுமக்களின் விருப்பை பிரதிநிதித்துவப்படுத்துவதாகும்.
   3. அது சொத்துடைய வர்க்கத்திற்காகப் பாடுபடுவதாகும்.
   4. அது மனிதனின் உரிமைகளின் பாதுகாவலனாக இருத்தலாகும்.
   5. அது மனிதனின் அதிஉயர் சமூகதாபனமாக விளங்குவதாகும். (……)

4. பாசிச அரசு என்பது.
   1. அது மர்மமானதாகும்.
   2. அது அதிசயத்தக்கதாகும்
   3. அதற்கு நிகர் எதுவுமில்லாததாகும்.
   4. அது இயற்கை மரணம் அடையக்கூடியது.
   5. அதற்கு ஆரம்பமோ முடிவோ கிடையாததாகும். (……)

5. தலையிடா அரசின் பிரதான பணிகளாவன,
   1.அமைதியான சூழலை அரசு உருவாக்குதல்.
   2.ஒரு பொலிஸ் அரசாக அரசு செயற்படுதல்.
   3.சமூகநலன் பேணும் கருவியாக அரசு தொழிற்படுதல்
   4.தனியாரினால் பொருளாதாரம் நெறிப்படுத்தப்படுதல்.
   5.அரசு பொருளாதார நடவடிக்கையிலிருந்து விலகியிருத்தல். (……)

6. ரூசோவின் சமூக ஒப்பந்தம்,
   1.ஒப்பந்தத்தின் உருவாக்கம் அரசாகும்.
   2.அனைத்து உரிமைகளும் சமூகத்திடம் ஒப்படைக்கப்பட்டதாகும்.
   3.அனைத்து உரிமைகளும் அரசியல் சமூகத்திடம் ஒப்படைக்கப்பட்டதாகும்.
   4.இறைமை அதிகாரம் பொது மக்களிடம் ஒப்படைக்கப்பட்டதாகும்.
   5.சட்டம் மற்றும் நிறைவேற்றம் பொதுமக்களிடம் ஒப்படைக்கப்பட்டதாகும். (……)

7.மக்கியாவல்லி என்பவர்.
1.இத்தாலியைப் பிறப்பிடமாகக் கொண்டவராவார்.
2.இளவரசன் என்ற நூலினை எழுதியவராவார்.
3.அதிகாரம் பற்றிய கற்கையை தொடக்கிவைத்தவராவார்.
4.நவீன அரசறிவியலின் தந்தை என்ற பெருமையைப் பெற்றவராவார்.
5.வரலாற்றில் முதல் இலட்சியவாதி என்ற பெருமையைப் பெற்றவராவார். (……)

8.அரசறிவியலின் பிரதான தலைப்புக்களாவன,
1.அதிகாரம் மற்றும் அதிகாரத் தொடர்புகள்
2.தேசிய கலாசாரம் மற்றும் சர்வதேச கலாசாரம்.
3.அரசியல் மோதல்கள் மற்றும் போராட்டங்கள்.
4.மனிதன் மற்றும் அவனது அரசியல் உலகம்.
5.அரச கொள்கை உருவாக்கம் மற்றும் அமுலாக்கம். (……)

09. ஒற்றையாட்சி என்பது,
1. அது பிளவுபட்ட சமூகங்களுக்கு உகந்ததாகும்.
2. அது விரையான ஆட்சிமுறையாகும்.
3. அது உறவுகளின் உணர்வுகளுக்கு இடம்கொடுக்காததாகும்.
4. அது உரிமைகளுக்கு உத்தரவாதம் வழங்காத ஆட்சிமுறையாகும்.
5. அது ஒற்றைக்குடியுரிமை கொண்ட ஆட்சியாகும். (……)

10. மந்திரிசபை ஆட்சிமுறையின் மூலக்கொள்கை.
1. இரட்டை நிர்வாகத்தைக் கொண்டதாகும்.
2. உறுதியான அரசாங்கத்தை கொண்டதாகும்.
3. பிரதமரின் தலைமைத்துவத்தை கொண்டதாகும்.
4. அரசியல் ஒருமைத்தன்மை கொண்டதாகும்.
5. பொறுப்புடைய அரசாங்கத்தை கொண்டதாகும். (……)

11. கம்யூனிசத்தின் தந்தை கால்மார்க்சினால் எழுதப்பட்ட இரு நூல்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

**1)………………………………………………… 2)…………………………………………………**

12. **'**குடியரசு**'** மற்றும் **'**அரசியல்**'** ஆகிய இரு நூல்களினலும் ஆசிரியர்கள் இருவரினதும் பெயர்களை முறையே குறிப்பிடுக.

**1)……………………………………………….. 2)…………………………………………………**

13. **'**அரசின் அமைச்சேர்க்கையில் 4 அங்கங்கள் தொடர்படுகின்றது**'** அவற்றுள் இரு அங்கங்களின் பெயர்களைக் குறிப்பிடுக

**1)…………………………………………….. 2)…………………………………………………**

14. **'**மூன்று தூண்களில் கட்டப்பட்ட கோபுரத்திற்கு சனநாயகத்தைக் குறிப்பிடுவர்**'** அவற்றுள் ஏதாவது இரு தூண்களைக் குறிக்கும் விடயத்தைக் குறிப்பிடுக. மேற்குறிப்பிட்ட இரு கூற்றுக்களுடன் தொடர்புடைய அரசியல் கருத்தியல்களைக் குறிப்பிடுக.

**1)………………………………………… 2)…………………….…………………………….**

15. சனநாயக அரசியலில் பொதுமக்களை அரசாங்கத்துடன் தொடர்புபடுத்தும் இரு வழிமுறைகளுக்கு உதாரணங்கள் கூறுக.

**1)…………………………………………    2)…………………………………………………..**

16. **'**அரசியல் பொருளாதாரக் கருத்தியல்களின் படி அரசாங்கங்கள் வகைப்படுத்தப்படுகின்றது**'** அந்த வகையீட்டின் இரு அரசாங்கங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

**1)………………………………………… 2)…..……………..…………………………………**

17. **'**நவீன அரசாங்கத்தின் சட்டத்துறையை இரு வகையாகப் பாகுபடுத்தப்படுகின்றது**'** அவ்வாறான இரு வகைப்பாகுபாட்டையும் குறிப்பிடுக.

**1)………………………………………… 2)……...…………………………………………..**

18. **'**நவீன அரசுகளை அதிகார அடிப்படையில் மூன்று வகையாகப் பாகுபடுத்தப்படுகின்றனர்**'** அவற்றுள் இரு வகையீடுகளைக் குறிப்பிடுக.

**1)………………………………………… 2)………………..……………………………**

19.**'**அரசாங்கத்தின் நிறைவேற்றுத்துறை மூன்ற வகையாகப் பாகுபடுத்தப்படுகிறது.**'** அவற்றுள் ஏதாவது இரு வகைகளைக் குறிப்பிடுக.

**1)………………………………………….. 2)…………………………………………………**

20.ஆயுதப்படைகள் - பணியகவாட்சி
வலுவேறாக்கம் - சட்டவாட்சி

மேற்குறிப்பிட்ட நான்கில் அரசாங்கம் மக்கள் மீது அதிகாரத்தைப் பிரயோகிக்கும் இரண்டு வழிமுறைகளைக் குறிப்பிடுக.

**1)………………………………………… 2)…………………….…………………………**

# வாரம் - 4
## அரசியல் விஞ்ஞானம்
## விடைகள்

1. - 5
2. - 5
3. - 3
4. - 4
5. - 3
6. - 5
7. - 5
8. - 2
9. - 1
10. - 3

11. 1. டாஸ் கப்பிறடல், தத்துவத்தின் வறுமை
    2. பிரான்சிய உள்நாட்டுப் போர்

12. 1. குடியரசு – பிளோட்டோ
    2. அரசியல் - அரிஸ்ரோட்டில

13. 1. இறைமை / ஆள்புலம்
    2. அரசாங்கம் / மக்கள் தொகை

14. 1. சுதந்திரம், சமத்துவம்
    2. உரிமைகள்

15. 1. தேர்தல்கள் / ஒப்பங்கோடல்
    2. அரசியற் கட்சிகள் / அமுக்கக்குழுக்கள்

16. 1. தாராள சனநாயகம் / சோசலிச அரசாங்கம்
    2. நவ தாராள சனநாயகம் / சமூக சனநாயகம்

17. 1. தனிமறை முறை
    2. இருமன்ற முறை

18. 1. வல்லரசுகள், சிறு அரசுகள்
    2. நடுத்தர அரசுகள்

19. 1. ஜனாதிபதி ஆட்சிமுறை, மந்திரி சபை ஆட்சி
    2. அணைத்தாண்மை முறை

20. 1. ஆயுதப்படைகள்
    2. பணியகவாட்சி